Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654


# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper


**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 085 | புதன்கிழமை Wednesday | 24.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

# ‘தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்’ செப்டம்பர் 15ல் தொடக்கம்

## ஆண்டுக்கு ரூ.755.83 கோடி ஒதுக்கீடு



சென்னை: ஜூன் 22 முதல் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகள் பயன்பெறும் வகையில் 'தாய்மாமன் தங்கமோதிரம் திட்டத்தை' அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று தமிழகம் முதல்வர் விஜய் தொடங்கி வைப்பார் என்று அரசு தெரிவித்துள்ளது. இந்தத் திட்டத்துக்காக ஆண்டுதோறும் ரூ.755.83 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தமிழக முதல்வரின் தலைமையில், வெற்றித் தமிழகம் தொலைநோக்கு திட்டங்களுக்கு (Vetri Thamizhagam vision document) தமிழக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் மிகவும் முக்கியமான திட்டம் 'தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்'.

அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும் ஒவ்வொரு குழந்தையையும், பிரசவித்த தாயையும் கவுரவிக்கும் முகமாக 'தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்' வடிவமைக்கப்பட்டு இன்று, இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழக அரசு தாய் - சேய் நலனை மேம்படுத்துவதற்கு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி, இலவச பிரசவம் மற்றும் புதிதாகப்பிறந்தகுழந்தை பராமரிப்பு சேவைகள், அவசர மகப்பேறு சிகிச்சை, ஊட்டச்சத்து அளித்தல், பிரசவத்துக்காக மருத்துவமனையை திட்டமிடும் முறை மற்றும் கர்ப்பிணி மற்றும் குழந்தைகள் கூட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மென்பொருள் (PICME) உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு இம்முயற்சிகள் மாநிலத்தில் தாய் - சேய் நலக் குறியீடுகளை குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தியுள்ளன.

அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும், தமிழகத்தில் நிரந்தரமாக வசிக்கும் குடும்பங்களை சார்ந்த தாய்மார்களின் குழந்தைகளுக்கு தமிழக முதலமைச்சரின் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ் ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும்.

தமிழர் பாரம்பரியத்தில், தாய்மாமன் சீர்' என்ற மரபின்படி, தமிழக முதல்வர், தாயின் சகோதரர் புதிதாகப் பிறந்த குழந்தையை வரவேற்று வாழ்த்தும் வகையில் தங்கம் உள்ளிட்ட பரிசுகளை வழங்கும் விதமாகவும், தமிழர் பண்பாட்டு மரபை பிரதிபலிக்கும் வகையிலும், அரசு ஒவ்வொரு குழந்தைக்கும் தாய்மாமனின் பங்கை ஏற்று, அன்பும் அக்கறையும் நிறைந்த வரவேற்பின் அடையாளமாக ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்பட உள்ளது.

தமிழக அரசின் சுகாதாரச் சேவைகளில் மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும் நோக்கிலும், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தையின் பிறப்பை நினைவுகூரும் வகையிலும், தாய்மையின் மகிழ்ச்சி மற்றும் முக்கியத்துவத்தை கொண்டாடும் வகையிலும் 'தாய்மாமன் தங்க மோதிரத் திட்டம்' செயல்படுத்தப்பட உள்ளது.

இந்தத் திட்டத்தை மாநிலத்தில் செயல்படுத்துவதற்காக தமிழக அரசு ஆண்டுதோறும் ரூ.755.83 கோடி நிதியை ஒதுக்கீடு செய்கிறது. இத்திட்டதுக்கான ஒப்பந்த புள்ளிகள் உடனடியாக கோருவதற்கு தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இந்தத் திட்டத்தின் கீழ், 22 ஜூன் 2026 முதல் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகள் பயன்பெறுவார்கள். 'தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்', அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15, 2026 அன்று முதல்வர் விஜய் துவக்கி வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “ஒன்றிய அரசோடு கண்மூடித்தன மோதலை விரும்பவில்லை”

## சட்டப்பேரவையில் முதலமைச்சர் விஜய் பேச்சு



"ஒன்றிய அரசு சார்ந்த கட்சியுடன் கொள்கை அளவில் நேரெதிராக நின்றாலும், எதெற்கெடுத்தாலும் கண்ணை மூடிக்கொண்டு ஒன்றிய அரசோடு மோதல் போக்கை விரும்பு பவர்கள் நாம் அல்ல. நமக்கு எப்போதும் தமிழகத்தின் வளர்ச்சி தான் முக்கியம். நாம் யாருடைய 'பி' டீமும் அல்ல, நாம் எப்போதும் தூய்மையான மக்களின் அணி." என தமிழக முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் பேசிய முதல்வர் விஜய், "நான் ஏதோ படப்பிடிப்பில் இருந்து நேராகவந்து முதல்வர் ஆனது போல எதிர்க்கட்சிகள் பேசுகின்றன. 1990-கள் முதல் பல வழிகளில் மக்களுக்கு துணையாக நின்றேன். எனது படங்களில் முடிந்த அளவு ஊழல் ஒழிப்பு, சமூக நீதி, கல்வி, அரசியல் பற்றி சொன்னோம். அதற்காக எனது படங்கள் சந்தித்த பிரச்சினைகள் அதிகம். மக்கள் நம்மை தெளிவாக புரிந்துகொண்டதால் ஆட்சியில் அமர்ந்துள்ளோம். நாம் ஆட்சிக்கு வந்து 40 நாட்களில் சிங்கப்பெண் அதிரடிப் படை, 200 யூனிட் குறுவைசாகுபடி தொகுப்பு, போதைப்பொருள் ஒழிப்புப் படை, 717 மதுபானக் கடைகள் மூடல், அம்மா உணவகங்கள் புதுப்பிப்பு, பத்திரப்பதிவுத்துறை பகல் கொள்ளைக்கு முற்றுப்புள்ளி, பயிர்க்கடன் தள்ளுபடி உள்ளிட்ட திட்டங்களை செய்துள்ளோம். கருவூலம் தேய்ந்து, ஓய்ந்து கிடக்கிறது. இப்படி ஒரு நிலையை உருவாக்கி வைத்துவிட்டு, நமக்கு ஆட்சி செய்ய தெரியாது என்கிறார்கள். எங்களுக்கு மக்கள் பணி மட்டும் செய்யத் தெரியும், மக்கள் பணத்தை சுரண்டத் தெரியாது. தமிழகம் மின்மிகை மாநிலமாக இருந்தாலும், கடந்த காலங்களில் ஏற்பட்ட நிர்வாக குளறுபடிகள், மின் சாதனங்கள், மின்மாற்றிகளில் ஏற்படும் பழுதாலும், வேண்டுமென்றே சிலரின் நடவடிக்கைகளுமே இந்த மின் வெட்டுக்கு காரணமாக உள்ளது. ஒன்றியத்தில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கையை கொண்டவர்கள் தான் நாம். தற்போதைய ஒன்றிய அரசு சார்ந்த கட்சியுடன் கொள்கை அளவில் நேரெதிராக நின்றாலும், எதெற்கெடுத்தாலும் கண்ணை மூடிக்கொண்டு ஒன்றிய அரசோடு மோதல் போக்கை விரும்புபவர்கள் நாம் அல்ல. நமக்கு எப்போதும் தமிழகத்தின் வளர்ச்சிதான் முக்கியம்.

அதற்காக அரசியல் ரீதியான கொள்கைகளையும், மாநில உரிமைகளையும் எப்போதும் விட்டுக்கொடுக்க மாட்டோம். இதில் மக்களுக்கும், சிறுபான்மை சகோதரர்களுக்கும், ஆதரவு இயக்கங்களுக்கும் எந்த சந்தேகமும் வேண்டாம். நாம் யாருடைய 'பி' டீமும் அல்ல, நாம் எப்போதும் தூய்மையான மக்களின் அணி. நீட் தேர்வு கூடாது என்பதில் உறுதியாக உள்ளோம்.த்தில்தமிழ்த் தாய் வாழ்த்து பாடுவது தான் நம் நிலைப்பாடு. சட்டம் ஒழுங்கு பிரச்சினையில் எதிர்க்கட்சிகள் அக்கறையோடு கேட்பதாகதெரியவில்லை. சட்டம் ஒழுங்கு பிரச்சினையில் எதிர்க்கட்சிகள் செய்வது அவதூறு அரசியல்." என்றார்.

# “சட்டப்பேரவையில் விசில் அடிக்கிறார்கள்; 10 ரீல்ஸ் தேறும்”

## முதல்வர் விஜய்க்கு எதிர்கட்சி தலைவர் உதயநிதி கண்டனம்

சென்னை: "சட்டப்பேரவையில் இன்றைக்கு முதல்வர் விஜய் 30 நிமிடம் பேசி இருக்கிறார்.



அதில் ஒரு 10 ரீல்ஸ் தேறும். திட்டமிட்டு தான் இதை, அவர்கள் செய்கிறார்கள். இவையெல்லாம் எதிர்பார்த்ததுதான். ஒரு கட்டத்துக்கு மேல் பொறுத்துக் கொள்ள முடியவில்லை," என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சித்து ள்ளார். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து இன்று சட்டப்பேரவையில் பேசிய முதல்வர் விஜய், திமுக ஆட்சி மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்ததால் அவையில் கடும் அமளி ஏற்பட்டது. முதல்வர் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். பின்னர், உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர்களிடம் பேசும்போது, "முதல்வர் விஜய், வழக்கம்போல சினிமா பாணியில் தனக்கு வழங்கப்பட்ட ஸ்கிரிப்டை பேசிக் கொண்டிருந்தார். பின்னர், உண்மைக்கு புறம்பான செய்திகளை சட்டப்பேரவையில் பதிய வைக்க ஆரம்பித்தார். தொடர்ந்து பத்திரிகையாளர்களும் முதல்வரிடம் கேள்வி கேட்க எவ்வளவோ முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால் அவர் உங்களுக்கும் பதில் சொல்வது கிடையாது. அதேபோல சட்டப்பேரவையில் எங்களுக்கும் பதில் சொல்வது கிடையாது. மக்களின் கேள்வியைத் தான் நாங்கள் கேட்கிறோம். முதல்வராக அவர் மக்களின் கேள்விக்கு பொறுப்பாக பதிலளிக்க வேண்டும். எதற்கெடுத்தாலும் திமுகவின் மீது பழி போடுவதை வழக்கமாக வைத்துள்ளார். ஆளுநர் சட்டப்பேரவைக்கு வரும்போது முதலில் தமிழ்த்தாய் வாழ்த்தும், இறுதியில் தேசிய கீதமும் பாடப்பட வேண்டும்; இதுதான் மரபு. ஆனால் இந்த முறை மரபு மீறப்பட்டிருக்கிறது. இது குறித்து கேள்வி எழுப்பினேன்; இதில் என்ன தவறு என கேட்கிறார்கள். அது தவறு கிடையாது; வாழ்த்துகள்.

தமிழ்த்தாய் வாழ்த்தை இரண்டு அல்லது மூன்று முறையோ ஒலிக்க வைக்க வேண்டியதுதானே என கேள்வி எழுப்பினேன். இந்த விவகாரத்தில் ஆளுநரும், நீங்களும் என்ன சமரசம் செய்து கொண்டீர்கள் என கேள்வி எழுப்பினேன். அதற்கு எந்தவித பதிலும் கிடையாது. ஒரு புரோட்டாகால் கூட முதல்வருக்கு தெரியாதது வருத்தமளிக்கிறது. குடியரசுத் தலைவருக்குதனி புரோட்டாகால் உள்ளது; அது ஆளுநருக்கு கிடையாது. நான் முதல்வன் திட்டத்தில் 41 லட்சம் மாணவர்கள் பல சாதனைகளை புரிந்துள்ளார்கள். அந்த திட்டத்தை ஏன் முடக்கினீர்கள் என கேள்வி எழுப்பினேன் அதற்கு அவர்கள் இஷ்டத்துக்கு ஆதாரம் இல்லாமல் முறையற்ற குற்றச்சாட்டுகளை வைத்தனர். மின்வெட்டு தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மீண்டும் அவகாசம் கேட்கிறார்கள்; அதையும் திமுக மீது பழி போட்டுவிட்டனர். எந்த விதமான கேள்விக்கும் தெளிவான பதில் கூறவில்லை. பயிர்க் கடன் தள்ளுபடி குறித்து கேட்டதற்கு, விவசாயிகளை திமுக தூண்டி விடுகிறது என முதல்வர் தெரிவித்துள்ளார். விவசாயிகளின் போராட்டத்தை முழுமையாக கொச்சைப் படுத்தியிருக்கிறார். யார் தயவுடனும் ஆட்சி அமைக்கவில்லை எனது முதல்வர் விஜய் சொல்கிறார்; பின்னர், அதிமுகவின் ஒரு பிரிவை மட்டும் ஏன் பார்க்கச் சென்றார். பீரோ புல்லிங் போல, அதிமுக எம்எல்ஏக்கள் இன்றைய அரசு இழுத்துக் கொண்டிருக்கிறது. இதை கேட்டதற்கு எந்த பதிலும் இல்லை.

சினிமா ஸ்பாட்டுக்கு ஒருவர் வந்து எப்படி, டயலாக்கை மனப்பாடம் செய்துவிட்டு, நடித்துவிட்டுச் செல்வாரோ, அதே போல இன்று முதல்வர் செய்திருக்கிறார். சட்டப்பேரவையை சினிமா தியேட்டர் போலவே ஆக்கிவிட்டனர்; சட்டப்பேரயில் இன்றைக்கு விசில் எல்லாம் அடிக்கிறார்கள். இதெல்லாம் இந்தச் சபை பார்க்காதது. தவெகவின் தேர்தல் வாக்குறுதிகள் குறித்து அவர்கள் எதுவும் பேசவில்லை. இந்த ஆட்சி கேலிக்கூத்து ஆட்சியாக உள்ளது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.






முதலமைச்சர் விஜய்யின் பிறந்தநாளை முன்னிட்டு

# மதுரை மாவட்டம் திருமங்கலம் தொகுதியில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கினர்



தமிழக முதல்வர் தளபதி விஜய் அவர்களின் 52 வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை மாவட்டம் திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட தமிழக வெற்றி கழகத்தின் கட்சி நிர்வாகிகள் சார்பில் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது

இந்த விழாவில் திருமங்கலம் மீனாட்சி சொக்கநாதர் திருக்கோவிலில் ஆராதனை பூஜைகள் நடைபெற்றுவிஜய்பல்லாண்டு வாழவேண்டியும்பூஜைகள் நடைபெற்றது

இன்று திருமங்கலம் தொகுதியில் பிறந்த குழந்தைகளுக்கு புதிய தங்க மோதிரம் வழங்கும் திட்டத்தையும் மேலும் பிறந்த குழந்தைகளுக்கு குழந்தை வளர்ச்சிக்கான பெட்டகம் மற்றும் தாய்க்கு சேலையும் நலத்திட்டங்கள் வழங்கப்பட்டது

கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் என் ஆனந்த் அவர்களின் ஆசியுடனும் மதுரை தொகுதியின் பொறுப்பாளர் மின்சாரத்துறை அமைச்சர் நிர்மல் குமார் அவர்களின் ஆசியுடனும் நலத்திட்டத்தினை திருமங்கலம் தொகுதி மாவட்ட தலைமை நிர்வாகி ஜெகன் மற்றும் கட்சி நிர்வாகிகள் நடத்தி வைத்தனர் இதில் சுமார் 30க்கும் மேற்பட்ட குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு சேலை வழங்கப்பட்டது மேலும் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு நேற்று இன்றும் நாளையும் பிறக்கக்கூடிய குழந்தைகளுக்குதங்கமோதிரம் பரிசாக வழங்கப்பட உள்ளது

## சுரண்டை அருகே பரங்குன்றாபுரத்தில் தவெக சார்பில் தமிழக முதல்வர் விஜய்யின் 52வது பிறந்தநாள் விழா



தென்காசி மத்திய மாவட்டம் சுரண்டை அருகேபரங்குன்றாபுரத்தில் தமிழக முதல்வர் விஜியின் 52-வது பிறந்த நாள் விழா தவெக சார்பில் நடைபெற்றது.

இவ்விழாவில் தமிழக வெற்றி கழக மூத்த நிர்வாகி என் டி எஸ் சார்லஸ் தலைமை தாங்கினார்

இவ்விழாவில் கடந்த 2025- 2026 ம் ஆண்டில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு கல்வி பயின்று அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசு மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது

தொடர்ந்து டி டி ஏ நடுநிலைப்பள்ளியில் பள்ளி மாணவமாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் மட்டும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

நிகழ்வில் தவெக ஆலங்குளம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்பி வி கதிர்வேல்

துணை செயலாளர் சுரேஷ், இணைசெயலாளர்லூர்துசாமி, உதயகுமார், ரெக்லேண்ட், ஒன்றிய துணை செயலாளர், ஆரோக்கிய லிவின்யா, கிளை நிர்வாகிகள் பொன்ராஜ் உட்பட பொதுமக்கள் பலர் உடனிருந்தனர்.



தமிழக முதல்வர் விஜயின் 52 வது பிறந்த நாளையொட்டி செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம் திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் சுமார் 3000 கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு ஆட்டுக்கறி மற்றும் கோழிக்கறி வறுவல் முட்டை என பிரியாணி அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி திருப்போரூர் ரவுண்டானாஅருகே நடைபெற்றது, தவெக செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட செயலாளர் தீனா, ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த பிரியாணி விருந்தில் தையூர் ஊராட்சி மன்ற தலைவர் குமரவேல், தண்டலம் ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்தன், தாகா நிர்வாகி நாகராஜ், உள்ளிட்ட சுமார் 3,000 மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்,



தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு ஈரோடு மாநகர தவெக சார்பில் தங்க மோதிரம் வழங்கும் நிகழ்வு (ஜூன்.22) அன்று நடைபெற்றது. ஈரோடு மாநகர தவெக முக்கிய நிர்வாகிகள் கலந்துகொண்ட இந்நிகழ்வில், (ஜூன்.22) காலையிலிருந்து மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளின் பட்டியல் பெறப்பட்டு குழந்தைகளின் பெற்றோர்களிடம் தங்க மோதிரம் வழங்கப்பட்டது.



வெற்றி கழகத்தின் நிறுவன தலைவரும் தமிழக முதலமைச்சருமான ஜோசப் விஜய் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மதுரை மண்டல போக்குவரத்து தொழிற்சங்கம் சார்பில் மண்டல தலைவர் ஈஸ்வரன் ஏற்பாட்டில் மாபெரும் அன்னதானம் நடைபெற்றது இதில் புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் மருது பாண்டியன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு நிர்வாகிகளுக்கு இனிப்பு வழங்கி அன்னதானத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மண்டல செயலாளர் செந்தில்குமரன் மண்டல பொருளாளர் ஜெயக்குமார் திருப்பரங்குன்றம் கிளை தலைவர் சுரேஷ் செயலாளர் செல்வராஜ் பொருளாளர் மாறன் கிளை துணைத் தலைவர் பிச்சைபாண்டி துணைச் செயலாளர் வினோத் துணை பொருளாளர் மணிவண்ணன் உட்பட நிர்வாகிகள் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர் வெற்றி கழகத்தின் நிறுவன தலைவரும் தமிழக முதலமைச்சருமான ஜோசப் விஜய் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நிலையூர் 97வது வார்டில் வட்டச் செயலாளர் முத்துப்பாண்டி ஏற்பாட்டில் மாபெரும் அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் மருதுபாண்டியன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு அன்னதானத்தை தொடங்கிவைத்தார். இந்நிகழ்வில் விஜய் கணேசன், வட்டத் துணைச் செயலாளர் ஏ.எல். விஜய் பொருளாளர் வேலு உட்பட கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள், ஏராளமானோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

முதலமைச்சர் விஜய்யின் பிறந்தநாளை முன்னிட்டு

# கோவை மாவட்டம் குப்பனூரில் உள்ள அன்பாலயத்தில் முதியோர், மனநலம் குன்றியவர்களுக்கு மதிய உணவு வழங்கினர்



தமிழக வெற்றிக்கழக தலைவரும், தமிழக முதல்வருமான ஜோஸப் விஜய்யின் பிறந்த நாளை முன்னிட்டு, கோவை மாவட்டம்பேரூர்,அடுத்த பச்சாபாளையம் பகுதியில் அமைந்துள்ள ஆவின் தொழிற்சங்கம் சார்பாக, கோவை மாவட்டம், மாதம்பட்டி அடுத்த குப்பனூர் பகுதியில்அமைந்துள்ள அன்பாலயம் எனும் முதியோர் மறு வாழ்வு ஆலயத்தில் வசிக்கும் முதியோர்கள், மாற்று திறனாளிகள், மனநலம் குன்றியவர்களுக்கு மதிய உணவு வழங்கபட்டது. காலை 10 மணி முதல், அன்பாலயம் சென்ற ஆவின் தொழிற்சங்க உறுப்பினர்கள், மற்றும் நிர்வாகிகள், அங்குள்ள முதியவர்களுடன் அன்றைய நாளை, மகிழ்ச்சியாக செலவிட்டனர். பாடல்கள் பாடியும், திரைப்பட வசனங்கள் பேசியும், தமிழக முதல்வர் விஜய்க்கு பிறந்தநாள் வாழ்த்துக்களைதெரிவித்தும்முதியவர்களும் மகிழ்ச்சி அடைந்தனர். பின்னர் இறைவணக்கபாடல்கள் பாடி, மதிய உணவுகளை உண்டனர்.

தொடர்த்து அன்பால் இணையும் இந்த ஆலயத்திற்கு தேவையான அனைத்து உதவி களையும் எப்பொழுதும் செய்ய தயார் நிலையில் உள்ளதாக ஆவின் தொழிற்சங்க நிர்வாகிகள் உறுதியளித்தனர். குறிப்பாக முதியவர்கள் பயன்படுத்தும் ஒற்றை படுக்கை, வீல் சேர், சோப்புகள், பேஸ்ட்கள், துணி மணிகள்,என எந்த தேவாயாக இருந்தாலும் அதனை செய்து தருவதாக தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சியின் பொழுது.. ஆவின் தொழிற்சங்க நிர்வாகிகளான தேவராஜ், மதன், கோகுல், ராஜேந்திரன், பாஸ்கரன், சக்திவேல், தெய்வகுமார், பிரசாந்த், வாசு தேவன், ரத்தினக்குமார், சசிகுமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் மேலும் சிறப்பு விருந்தினராக தமிழக வெற்றிக்கழகத்தின்,கோவை தெற்கு தொகுதி ஒன்றிய செயலாளர் விஜய் கலந்து கொண்டு உணவுகளை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

முதலமைச்சர் விஜய்யின் பிறந்தநாளை முன்னிட்டு

## தொண்டாமுத்தூர் பகுதியில் த.வெ.க. சார்பில் நலத்திட்ட உதவிகள், கல்வி உபகரணங்கள் வழங்கினர்

தமிழகமுதல்வர்விஜய்யின் பிறந்தநாளை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகளை முன்னெடுத்து பொதுமக்கள் மத்தியில் நற்பெயரை பெற்ற தமிழக வெற்றிக்கழகத்தினர். குறிப்பாக கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் பகுதியில் நலத்திட்ட உதவிகள், கல்வி உபகரணங்கள், தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடைகள் என வழங்கி கொண்டாடினர்.



தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவரும், தமிழக முதல்வருமான ஜோஸப் விஜயின்52வதுபிறந்தநாள் விழா அவருகளது கட்சி நிர்வாகி களால் தமிழகம் முழுவதும் பல்வேறு நிகழ்வு களை முன்னெடுத்து நடக்க பட்டது. இதன் ஒரு பகுதியாக கோவை மாவட்டம், கிணத்துக்கடவு சட்ட மன்ற உறுப்பினரும், மதுவிலக்குமற்றும்ஆயத்தீர்வை துறை அமைச்சருமான க.விக்னேஷ் ஆலோசனையின் பேரில்,கோவை தொண்டாமுத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கோவைஎஸ்.விஜய்தலைமையில் கடந்த இரண்டு நாட்களாக பல்வேறு நிகழ்ச்சிகள்முன்னெடுக்க பட்டது.இதில்ஒன்றியநிர்வாகிகள்,ஊராட்சிநிர்வாகிகள், கிளை நிர்வாகிகள், மகளீரணி தொண்டரணி, இளைஞரணி, மாணவரணி, வர்த்தகஅணி விளையாட்டு அணி, நிர்வாகிகள் கலந்து கொண்டனர் முதற்கட்டமாக கோவைமாவட்டம்,பேரூர், செட்டிபாளையம் பகுதியில்,சுமார் 250க்கும் மேற்பட்ட நபர்களுக்கு அன்னதானம் வழங்க பட்டதுடன், அதே பகுதியில் உள்ள அரசு பள்ளி மாணவ மாணவிகள், 200 நபர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கபட்டது. தொடர்ந்து மாவட்ட அளவிலான கபடி போட்டிகள் நடத்த பட்டது. இதனையடுத்து கோவை, ஆறுமுக கவுண்டனூர், பகுதியில் சுமார் 200 நபர்களுக்கு அன்னதானமும், அதே பகுதியை சேர்ந்த அரசுபள்ளி மாணவ மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்களும் வழங்கபட்டது. இதனை தொடர்ந்து கோவை மாவட்டம்

பச்சாபாளையம், பகுதியில் உள்ள அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கி கொண்டாட பட்டது. மேலும் கோவை மாவட்டம், செல்லப்ப கவுண்டன் புதூர் பகுதியில், இலவச கண் சிகிச்சை முகாம், கோவை காளம் பாளையம் பகுதியில் உள்ளஅரசுபள்ளிமாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா, கோவை, தீத்திபாளையம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில், தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடைகள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள், 250 நபர்களுக்கு மதிய உணவுகள், 200க்கும் மேற்பட்ட அரசு பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் என கடந்த இரு தினங்களாக பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுரண்டை சிவகுருநாதபுரம் அகிலாண்டேஸ்வரி அம்பிகா ஸ்மேத

## ஸ்ரீ அண்ணா மலையார் திருக்கோவிலில் இரண்டாம் கால பூஜை, மூன்றாம் கால பூஜை



தென்காசி மாவட்டம் சுரண்டை சிவகுருநாதபுரம் ஸ்ரீ அண்ணாமலை நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பிகா ஸ்மேத

ஸ்ரீ அண்ணா மலையார் திருக்கோவிலில் நூதன ஆலய நூதன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகவிழா நடைபெறுவதை யெட்டி இரண்டாம் கால பூஜை, மற்றும் மூன்றாம் கால பூஜை சுரண்டை சிவன் கோவில் ஸ்தானிகர் சிவாச்சாரியார் சிவாகம சிரோன்மணி சிவாகம ரத்னா சிவ எம் மணிகண்டன் தலைமையில் 36 சிவசாரியார்கள்மற்றும் ஸ்ரீ அன்னாமலையார் ஈஸ்வரர் திருக் கோயில் அர்ச்சகர் சங்கரன் ஆகியோர் கலந்து கொண்டு மங்கள இசை, முழங்க,ஸ்ரீ விக்னேஸ்வர பூஜை,புண்யாஹ வாசனம், பஞ்சகாவ்யம்,மண்டபபூஜை,அஷ்டோத்தரஅர்ச்சனை , சூரிய பூஜை, சந்திர பூஜை, வேதிகா அர்ச்சனை , அக்கினி காரியம் , தீராவ்யா ஹுதி பூர்ணாஹூதி மற்றும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது பின்னர் கலந்து கொண்ட அனைவருக்கும் யந்திரங்தாபனம் பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகளை சிவகுருநாதபுரம்ஸ்ரீ அண்ணா மலையார் கோவில் நிர்வாக கமிட்டி தலைவர் வைரமுத்து, செயலாளர் ஏ எம் சமுத்திரம், பொருளாளர் சமுத்திரம், துணைத் தலைவர் இலட்சுமணன், துணைச் செயலாளர் மாரியப்பன், ஆகியோர் முன்னிலையில் ஏற்பாடுகள் செய்திருந்தனர்.



தென்காசி மாவட்டம் கீழப்புலியூர் அருள்மிகு ஸ்ரீ சந்தை காவல் போத்தி சாஸ்தா திருக்கோயில் நான்காம் ஆண்டு வருஷாபிஷேகம் நடைபெற்றது. கோவிலில் சாஸ்தாவுக்கு சிறப்பு பூஜைகளும்,சிறப்பு அலங்காரமும் நடைபெற்றதுவிழாவினைடிரஸ்ட்அமைப்பினர்சிறப்பாக செய்திருந்தனர்ஏராளமானபெண்கள்கலந்துகொண்டனர் தொடர்ந்து சிறப்பு அன்னதானம் நடைபெற்றது

# பெண்ணை காதலிப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனையில் அடிதடி ஏற்பட்டு இருசக்கர வாகனம் எரிப்பு; ஒருவர் கைது

21.06.2026-ம் தேதி அன்று ஆலமரத்து வீதியில் காதல் விவகாரம் தொடர்பாக, கிஷோர் மற்றும் வீராசாமி ஆகிய இருதரப்பினருக்கிடையே ஏற்பட்ட தகராறில், இருதரப்பினர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. அப்போது சமாதான



ப்படுத்த சென்ற சூசைநாதன்(54) என்பவரை வீராசாமி அடித்துவிட்டார். என்பதற்காக, வீராசாமியின் பல்சர் இருசக்கர வாகனத்தை சூசைநாதன் தீ வைத்து எரித்துவிட்டதாக கொடுத்த புகாரின் பேரில் விசாரணை செய்து, மேற்படி எதிரியான சூசைநாதனை ஈரோடு தெற்கு காவல் நிலைய ஆய்வாளர் அவர்களால் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட உள்ளார்.இவ்வாறு பொது இடத்தில் தகராறு செய்யும் நபர்கள் மீது உடனடி மற்றும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை ஈரோடு மாவட்ட காவல்துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.



சிவகிரி தாலுகா தேவிப்பட்டிணத்தில் உள்ள ஜெயச்சந்திராபுரம் பகுதி மக்கள் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தலைமையில் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரிக்கை மனு கொடுத்தனர் அந்த மனுவில் தேவிப்பட்டிணம் ஊராட்சியில் உள்ள ஜெயச்சந்திரா புரத்தில் நாடார் சமுதாய மக்கள் மட்டும் வாழும் எட்டு தெருக்கள் உள்ளன இந்த எட்டு தெருக்களிலும் கழிவு நீர் ஓடை இல்லாமல் தெருக்களில் ஆங்காங்கே கழிவுநீர்கள் தேங்கி கிடக்கிறது அதனால் இந்த எட்டு தெருகளிலும் கழிவு நீர் ஓடை அமைத்து தெருக்களில் ஹாலோ பிளாக் கல் பதிக்க வேண்டும் என்றும் இங்கு காலம் காலமாக எட்டு தெருகளிலும் மண் தரை தான் இருக்கிறது என்றும் இங்கு உள்ள பெண்கள் சுகாதார வளாகத்தில் கதவுகள் உடைந்து பராமரிப்பு இல்லாமல் சுத்தம் செய்யாமல் அசுத்தமாக கிடைக்கிறது இதனை பராமரிக்க வேண்டும் என்றும் வீடுகளுக்கு தண்ணீர் செல்வதற்கு குடிநீர் இணைப்புகள் பிரித்து விடுகின்ற இடங்களில் கழிவு நீர்கள் தேங்கி குடிநீரோடு கண்ணுக்கு தெரியாத கிருமிகள் கலக்கிறது இதனை சரி செய்ய வேண்டும் என்று தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்தனர் இதில் தேவிபட்டிணம் அல்லிராஜன், தங்க ரத்தினராஜ் ,பச்சை மயில் , தங்கமலை, குருசாமி நாடார், ஆகியோர் உடனிருந்தனர்

## ஆலங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி கருப்புப்பட்டை பெற்று சாதனை

ஆலங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி கருப்புப்பட்டை பெற்று சாதனை ;-

அகில இந்திய இஷின்ரியூ கராத்தே கழக தலைவர் ஷீகான் ஹூசைனி அவரது ஆசியுடன்,



ஹான்சி செல்லபாண்டியன் 10-வது டான் ரெட் பெல்ட் அவரது தலைமையில், 50 -வது ஆண்டு மாபெரும் கருப்புப்பட்டை மற்றும் டான் சான்றிதழ்கள் வழங்கும் விழா சென்னை அடையார் இளைஞர் விடுதியில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

இவ்விழாவில் தென்காசி மாவட்டத்தை சேர்ந்த ஹச் யு எஸ் ஏ எஸ் ஹச் ஏ கோ அகடமி சார்பில் சென்சாய் கோபி தலைமையில் 12 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் ஆலங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவிகள் கலந்து கொண்ட தில சென்சாய் எஸ்.ராமஷாலினி

1ம் நிலை கருப்புப்பட்டையும் டான் சான்றிதழ்களும் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

கருப்புப்பட்டை பெற்ற மாணவியை பள்ளி தலைமை ஆசிரியர் நாகம்மாள் துணை தலைமை ஆசிரியர்கள் செந்தாமரைச்செல்வி மற்றும் பள்ளி ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவியை பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தனர்.



தமிழக முதல்வர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு, ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வடக்கு ஒன்றியம் கொமாரபாளையம் ஊராட்சியில் உள்ள தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு நோட்டு புத்தகங்கள் மற்றும் இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் தவெக நிர்வாகி எஸ்.எம்.சரவணன், மகளிர் அணி, இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் பகுதியில்

## எந்த வித அடிப்படை வசதிகளும் இல்லாமல், தனித்தீவில் வசிப்பது போன்றநிலை

### உரிய நடவடிக்கை எடுக்குமா?



கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் பகுதியில்,தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கீழ் சுமார் 1800 வீடுகள் கட்டப்பட்டு,அனைத்து வீடுகளுக்கும் தற்பொழுது பயனாளிகளுக்குவழங்க பட்டுள்ளது. இங்கு சுமார் 2 ஆண்டுகளாக வசிக்கும் பொதுமக்களுக்கு தேவையான எந்த வித அடிப்படை வசதிகளும் இதுவரை செய்து தர படவில்லை. இது குறித்து பலமுறை அதிகாரிகளிடம் மனு, அளித்தும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கபடவில்லை என்று பொதுமக்கள் குற்றம் சாட்டி வரும் நிலையில் இது குறித்து,தமிழ்நாடு பனை தொழிலாளர்கள் மற்றும் அனைத்து உடல் உழைப்பு கட்டுமான போது தொழிலாளர்கள் நல வாரிய சங்க மாநில பொதுச்செயலாளர் மாரியப்பன், செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது..

தமிழக முதல்வருக்கு எங்களது அமைப்பு சார்பாக இப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும் என்று கோரிக்கை மனு அனுப்ப பட்டுள்ளது.

அந்த மனுவில், இந்த பகுதியில் உள்ள 1800 வீடுகளுக்கும், சுற்றுசுவர் இல்லாமல் காடு போல காட்சியளிக்கும் இந்த பகுதியில் இருந்து தினமும் நூற்றுக்கும் மேற்பட்ட, பாம்புகள், பூரான்கள், தேள்கள் வருகின்றது. இது இங்கு விளையாடும் குழந்தைகளையும் கடிக்கும் நிலை உள்ளது. ரேஷன் கடை உள்ளது ஆனால் இதுவரை திறக்க பட வில்லை. அதற்கான பணியாளர்கள் யாரும் நியமிக்க பட வில்லை, இங்கிருந்து மருத்துவமனை, மளிகை கடை, அத்தியாவசிய தேவைகள் உட்பட எங்கு செல்ல வேண்டும் என்றாலும் நடந்து தான் செல்ல வேண்டும், அரசு பேருந்து வசதிகள் இல்லை, பேருந்து வசதிகளை ஏற்படுத்தி தர படவில்லை, தெருவிளக்கு இல்லை, நல்ல குடிநீர் வசதிகள் இல்லை. உப்பு தண்ணீருக்கு மாதம் 250 என வீடுகளுக்கு வசூலிக்க படுகின்றது. ஆனால் உப்பு தண்ணீரும் முறையாக வருவதில்லை நல்ல தண்ணீர் வந்தாலும் அதனை மாடி படிகளில் கொண்டு செல்ல வழியில்லை, கைகளில் தூக்கி செல்லும் நிலைதான் உள்ளது. கர்ப்பிணி பெண்களுக்கு அவசர உதவி என்றால் கூட இங்கு இருந்து செல்ல வாகன வசதிகள் இல்லை. மொத்தத்தில் இங்கு வசிப்பது ஒரு தனித்தீவில் வசிப்பது போன்ற நிலையில் நாங்கள் வசிக்கின்றோம். குறிப்பாக 1800 குடும்பங்கள் வசிக்கும் இந்த பகுதியில் சுபநிகழ்ச்சிகள் கொண்டாட ஒரு சமூதாய கூடம் இல்லை, முதுயவர்கள் நடை பயிற்சி மேற்கொள்ளவும், குழந்தைகள் பொழுதை போக்கவும் ஒரு பூங்கா இல்லை, மேல் நிலை நீர் தேக்க தொட்டியில்லை இது போன்ற பங்வேறு வசதிகளை செய்து தாருங்ககள் என்று பலமுறை அதிகாரிகளிடமும், அமைச்சர்களிடமும் மனு அளித்தும் இது வரை எந்த வித நடவடிக்கையும் எடுக்க வில்லை எனவே முதல்வர் அவர்கள் இங்குள்ள 1800 குடும்பங்களையும் காக்க, அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை உடனுக்குடன் செய்து தர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். இந்த செய்தியாளர்கள் சந்திப்பின் பொழுது

அதே பகுதியை சேர்ந்த மனோஜ் குமார், சசிகுமார், சமூக ஆர்வலர் பெஞ்சமின், மாநில தலைவர் ராதா, ஜொகரா, உண்ணாமலை, ராமு, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## போதைப்பொருள் பயன்பாடு மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை, டிசம்பர் 1987 -ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 26-ஆம் தேதியை "போதைப்பொருள் பயன்பாடு மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினமாக" பிரகடனப்படுத்தியுள்ளது. கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும், இந்தத் தீமைக்கு எதிராக பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், போதைப்பொருள் பயன்பாடு மற்றும் போதை மருந்துகள் மற்றும் மனோவியல் பொருட்களின் சட்டவிரோத கடத்தலுக்கு எதிராக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கும் ஜூன் 26-ஆம் தேதியை "போதைப்பொருள் பயன்பாடு மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினமாக" தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. போதைப் பொருள் பயன்பாடு மற்றும் தடுப்பது குறித்து ஒரு பகுதியாக, 20.06.2026 முதல் 26.06.2026 வரை ஒரு வார காலத்திற்கு, மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் EB CID மற்றும் மாவட்ட காவல் துறையுடன் இணைந்து தகுந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த ஈரோடு மாவட்ட காவல் துறை திட்டமிட்டுள்ளது.

சட்டவிரோத போதைப்பொருட்களால் ஏற்படும் தொடர்ச்சியான உலகளாவிய அச்சுறுத்தலை தடுக்கவும், செயற்கை போதைப்பொருட்கள், இணையவழி போதைப்பொருள் சந்தைகள், டார்க்நெட் மூலம் நடைபெறும் கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களால் புதிய தொழில் நுட்பங்களின் சுரண்டல் போன்ற வளர்ந்து வரும் சவால்களை எதிர் கொள்ளவும் போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் சட்டவிரோத கடத்தலைக் கையாள்வதோடு, சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல் வலையமைப்புகளைத் தகர்ப்பதற்கும், தடுப்பு, அமலாக்கம், சிகிச்சை, மறுவாழ்வு, உளவுத் தகவல்களைப் பகிர்தல் போன்ற போதைப் பொருள் பயன்பாட்டை முற்றிலும் தடுக்க இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி வலியுறுத்துகிறது.

போதைப்பொருள் மற்றும் மனநலப் பாதிப்பை ஏற்படுத்தும் பொருட்கள் (NDPS) சட்டத்தை அமல்படுத்துதல், போதைப்பொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துதல் மற்றும் போதை மீட்பு நடவடிக்கைகளில் (போதைமீட்பு மையங்கள்) ஈடுபட்டுள்ள பல்வேறு அரசு அமைப்புகளைத் தவிர, தன்னார்வ அமைப்புகள் /முன்னணி அரசு சாரா நிறுவனங்கள் (NGOs) மற்றும் கல்வி நிறுவனங்களையும் இந்த நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்தவும் போதைப்பொருள் பயன்பாட்டின் தீமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான போராட்டத்தில் மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறவும், இளைஞர்களிடையே ஆர்வத்தைத் தூண்டவும், வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் போதைப்பொருள் எதிர்ப்பு பேரணிகள்/ விளையாட்டு போட்டிகள் / ஊர்வலங்களை நடத்தவும், போதைப்பொருள் பயன்பாட்டிற்கு ஆளாகக்கூடிய அபாயம் உள்ள குறிப்பிட்ட பகுதிகளில் பொதுக்கூட்டங்களை நடத்தவும், பல்வேறு அமலாக்கமுகமைகள்/ அரசு சாரா நிறுவனங்கள் (NGOs) மூலம் போதைப்பொருள் விநியோகத்தைக் குறைத்தல் மற்றும் தேவையை குறைத்தல் ஆகியவற்றுக்கான புதிய உத்திகளை வகுக்கப் பயிலரங்குகளை நடத்தவும், குறுஞ்செய்திகளை (Bulk SMS) அனுப்பவும், வானொலி நிலையங்கள் மூலம் பிராந்திய மொழியில் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பவும்,பொது இடங்களில் பதாகைகள், சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், பெரிய விளம்பரப் பலகைகள் (hoardings) மற்றும் காட்சிகள் (slide shows) ஆகியவற்றைக் மின்னணு உறுதிமொழிப் பிரச்சாரங்களை (இணையதளம்:https://drugfreetamilnadu.tn.gov.in/en) மேற்கொண்டு 20.06.2026 முதல் 26.06.2026 வரை ஒரு வாரகாலத்திற்கு தொடர்ந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தவும், இத்திட்டத்தில் பொதுமக்கள் தாமாக முன்வந்து பங்கேற்று குறிப்பிடதக்க தாக்கத்தை ஏற்படுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்பதை ஈரோடு மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. காட்சிப்படுத்தவும்,

## ஈரோடு மாவட்ட அளவிலான ஸ்டார்ட் Run, ஸ்டாப் Drugs போதை பொருள் எதிர்ப்பு ஓட்டம்

### ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி தகவல்



தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், ஈரோடு மாவட்ட அளவிலான ஸ்டார்ட் Run,ஸ்டாப் Drugs' - போதை பொருள் எதிர்ப்பு ஓட்டம்.2026 - 26.06.2026 அன்று காலை 6.00 மணி அளவில் ஈரோடு வ.உ.சி பூங்கா விளையாட்டு அரங்கில் துவங்கி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்று திரும்ப வ.உ.சி பூங்கா விளையாட்டு அரங்கில் முடிக்கப்பட வேண்டும்.

ஸ்டார்ட் Run, ஸ்டாப் Drugs' - போதை பொருள் எதிர்ப்பு ஓட்டம். 2026 -14 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு சுமார் 5 கிலோமீட்டர் தூரத்தினை உள்ளடக்கியதாக இருக்கும். ஸ்டார்ட் Run,ஸ்டாப் Drugs' - போதை பொருள் எதிர்ப்பு ஓட்டம்.2026 த்தில் கலந்துகொள்பவர்கள் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படிப்பவராக இருந்தால் பள்ளி/கல்லூரிகளில் படிப்பதற்கான சான்றிதழ் கொண்டு வருதல் வேண்டும்.

போதைப்பொருள் எதிர்ப்பு ஓட்டத்தில் கலந்து கொள்பவர்கள் ஒரு மணி நேரத்திற்கு முன்னரே மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்கு வருகை தருதல் வேண்டும்.

ஆதலால் பள்ளி/கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகள், மற்றும் அரசு ஊழியர்கள், பொதுமக்கள் தங்கள் வயது சான்றிதழ், ஆதார் கார்டு நகல் ஆகியவற்றுடன் 25.06.2026 அன்று மாலை 5.00 மணி வரை மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் தங்களது பெயரினை, வயது சான்றிதழ், மருத்துவரின் தகுதி சான்றிதழ் மற்றும் ஆதார் கார்டு நகலுடன் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். முதலில் வரும் 500 நபர்களுக்கு சீருடை வழங்கப்படும்.

போதைப்பொருள் எதிர்ப்பு ஓட்டத்தில் கலந்து கொள்பவர்கள் நிகழ்வுகளில் நேரும் எதிர்பாராத விபத்துகளுக்கோ மற்றும் தனிப்பட்ட பொது இழப்புகளுக்கோ பங்கேற்பாளர்களே பொறுப்பு ஏற்க வேண்டும். கலந்து கொள்ள விருப்பமுள்ள அனைவரும் கீழ்காணும் இணையளத்தில் பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

https://docs.google.com/forms/d/e/1FAIpQLScuWm8jJQW2gRuazfnAx13zH-3mzEqA0sj6DUqxZxBke9Vc4KA/viewform?usp=header

இது தொடர்பான மேலும் விவரங்களுக்கு 7401703490, 9788736392, 8939188166 தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் பச்சைமலை அருள்மிகு ஶ்ரீ சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் சிவகாமி அம்பாள் சமேத நடராஜ சுவாமிக்கு ஆனித் திருமஞ்சன மஹா அபிஷேகம், 108 சங்காபிஷேகம், மஹா தரிசன நிகழ்வு (ஜூன்.22) அன்று நடைபெற்றது. அதன்படி நேற்று காலை 8.30 மணி முதல் 12 மணி வரை நடராஜர் மஹா ஹோமம், 12 மணிக்கு மஹா அபிஷேகம், 1.30 மணிக்கு 108 சங்காபிஷேகம், 2 மணிக்கு மஹா தீபாராதனை, நடராஜர் ஆனந்த நடன தரிசன நிகழ்வு நடைபெற்றது.



தமிழக முதல்வர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு மாவட்டம் சென்னிமலை அரசு மருத்துவமனையில் தவெகவினர்சார்பில் ரத்ததானமுகாம் நடைபெற்றது. சென்னிமலை தமிழக வெற்றிக்கழகத்தின் மகளிர்அணி செயலாளர் மைதிலி மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டு முகாமினை துவக்கிவைத்தனர். காசிபாளையம் ஆரம்ப சுகாதார மருத்துவர் டாக்டர் குமார் தலைமையில் இந்த ரத்ததான முகாம் நடைபெற்றது.



ஈரோடு மாநகர் கோட்டை பகுதியில் உள்ள அருள்மிகு ஶ்ரீ ஆருத்ரா கபாலீஸ்வரர் கோவிலில் சக்கரத்தாழ்வார் ஜெயந்தி விழாவை ஒட்டி மூன்று நாட்கள் சுதர்சன யாக பூஜை நடைபெறுகிறது. நேற்று முன்தினம் தொடங்கிய இந்த யாக பூஜை தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறுகிறது. சிவாச்சாரியார்கள் பிரமாண்டமான ஹோம குண்டம் அமைத்து இந்த சுதர்சன யாகத்தை நடத்தினார்கள். இந்த யாக பூஜையில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு வடக்கு மாவட்டம், அம்மாபேட்டை மேற்கு மண்டலத்தில் பாஜக கட்சியின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மாவட்டப் பொருளாளர் கே.கண்ணன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், கட்சியின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் தேசப்பணிகள் குறித்து முக்கிய ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்வில் மண்டல அளவிலான முக்கிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பழங்குடியின இளைஞர்களுக்கு நெகிழி செயலாக்க இயந்திரம் இயக்குபவர்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது

## ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலமாக மத்திய பெட்ரோ கெமிக்கல்ஸ் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு நெகிழி செயலாக்க இயந்திர இயக்குபவர் (Machine Operator Plastics Processing Course) பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியினை பெற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினராகவும், பத்தாம்வகுப்பில்தேர்ச்சி பெற்றவராகவும், வயது வரம்பு 18 முதல் 35 வயதிற்குள்ளும், மற்றும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 லட்சத்திற்குள் இருக்க வேண்டும். இப்பயிற்சி சென்னை மாவட்டத்தில் நடைபெற உள்ளது. கால அளவு நான்கு மாதங்கள் ஆகும். பயிற்சி பெறும் காலங்களில் இளைஞர்களுக்கு உதவித் தொகையாக ஒரு மாதத்திற்கு ரூ.2000/- வீதம் வழங்கப்படும்.

இப்பயிற்சியில் தேர்ச்சி பெறும் தகுதியான நபர்களை பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் மூலமாக வேலை வாய்ப்புக்கான வழிவகை செய்யப்படும். ஆரம்ப கால மாத ஊதியமாக சுமார் ரூ.18000/- முதல் ரூ.22,000 /- வரை வருவாய் ஈட்டும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும். இப்பயிற்சியில் சேருவதற்கு தாட்கோ இணையதளமான (www.tahdco.com) என்ற முகவரியில் பதிவு செய்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

மேலும் விபரங்களுக்கு அணுகவும் தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகம், 6வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு. தொலைபேசி எண்- 0424-2259453

# தமிழ்நாடு முழுவதும் 18 இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் அதிரடி 'ரெய்டு'

சென்னை:

ஆசிரியர் தகுதித் தேர்வில் நடைபெற்றதாகக் கூறப்படும் முறைகேடு தொடர்பாக இன்று தமிழ்நாட்டில் 18 இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள், அதிரடி சோதனை மேற்கொண்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் இந்த சோதனை நடைபெற்று வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. சுமார் 50-க்கும் மேற்பட்ட அமலாக்கத்துறை அதிகாரிகள், துப்பாக்கி ஏந்திய சிஆர்பிஎஃப் போலீசார் உதவியுடன், முதல் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் குறிப்பாக சென்னையில் அண்ணா நகர் பகுதியில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பிலும், ஐசிஎஃப்,புழல்,பெரவள்ளூர் உள்ளிட்ட பகுதிகளில் அமலாக்கத்துறை ஆய்வில் ஈடுபட்டுள்ளனர். மேலும் தேர்வு வாரியத்தின் உறுப்பினரான உமா என்பவர், சென்னை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் இந்த குளறுபடி தொடர்பாக புகார் அளித்தார்.





இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார், இடைத்தரகர்கள், பள்ளிக்கல்வித்துறை சங்கத்தில் செயல்படுபவர்கள் என 156 நபர்கள் மீது வழக்குப்பதிவு செய்தனர். மேலும் இதில் தரகர்கள், டேட்டா என்ட்ரி நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் பள்ளிக்கல்வித்துறை ஊழியர்கள், சங்கத்தை சேர்ந்தவர்கள் என 19 நபர்களும் கைது செய்யப்பட்டனர். 18 இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் அதிரடி சோதனை மேற்கொண்டு வருகின்றனர். இதில் சென்னை பெரவள்ளூர் பகுதியைச் சேர்ந்த விநாயகமூர்த்தி, அண்ணா நகர் பகுதியை சேர்ந்த செந்தில்குமார் உள்ளிட்டோர் வீடுகளில் அமலாக்கத் துறை சோதனை நடைபெற்று வருகிறது.

# கே.என்.நேரு மீதான லஞ்ச ஒழிப்பு துறை வழக்கு: ஜூலை 10 வரை நடவடிக்கை எடுக்கக் கூடாது என ஐகோர்ட் உத்தரவு



சென்னை: முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்டோரின் மறு ஆய்வு மனுக்கள் மீதான விசாரணையையும், முந்தைய திமுக அரசு தாக்கல் செய்த மறு ஆய்வு மனுவை வாபஸ் பெற அனுமதி கோரி தவெக அரசு தாக்கல் செய்த மனு மீதான விசாரணையையும் ஜூலை 10-ம் தேதிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்துள்ளனர்.

கடந்த திமுக ஆட்சி காலத்தில் நகராட்சி நிர்வாக துறையில், 2,538 உதவி பொறியாளர்கள் மற்றும் இளநிலை பொறியாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் நியமனத்துக்கு 634 கோடி ரூபாய் லஞ்சம் பெறப்பட்டுள்ளதாக கூறி, அமலாக்கத் துறை அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில், வழக்குப் பதிவு செய்ய லஞ்ச ஒழிப்புத் துறைக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யாததை அடுத்து, அதிமுக எம்.பி.இன்பதுரை தரப்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதேபோல வழக்குப் பதிவு செய்ய பிறப்பித்த உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு தரப்பிலும் மனுக்கள் தாக்கல் செய்யப்படிருந்தன.

இந்த வழக்குகள், தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி. அருள்முருகன் அமர்வில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தன. அப்போது, முன்னாள் அமைச்சர் நேருவின் சகோதரர் உள்ளிட்டோர் தரப்பிலும், வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்ற உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

தமிழக அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண், லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்ற உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி தமிழக அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை திரும்பப் பெறக் கோரி மனுத் தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்தார். ஆட்சி மாறினாலும், முந்தைய அரசு எடுத்த நிலைபாட்டுக்கு மாறாக தற்போதைய அரசு எடுத்துள்ள நிலைபாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், பிரதான வழக்கில் தங்கள் தரப்பு விளக்கத்தை கேட்காமலேயே உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளதால், அந்த உத்தரவை மறு ஆய்வு செய்ய வேண்டும் என நேரு உள்ளிட்டோர் தரப்பில் ஆட்சேபம் தெரிவித்து வாதிடப்பட்டது.

இதையடுத்து, நேரு உள்ளிட்டோரின் மறு ஆய்வு மனுக்கள் மீதான விசாரணையையும், முந்தைய திமுக அரசு தாக்கல் செய்த மறு ஆய்வு மனுவை வாபஸ் பெற அனுமதி கோரி தற்போதைய அரசு தாக்கல் செய்த மனு மீதான விசாரணையையும் நீதிபதிகள், ஜூலை 10-ம் தேதிக்கு தள்ளிவைத்துள்ளனர். அதுவரை இது சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட வழக்கின் மீது மேல் நடவடிக்கை எடுக்க கூடாது என்ற இடைக்கால உத்தரவையும் நீட்டித்து நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

# CUETUG 2026 results out; one candidate bags 100 percentile in four subjects

One candidate achieved 100 percentile in four out of five opted subjects in the Common University Entrance Test-Undergraduate (CUET-UG) 2026, results of which were announced by the National Testing Agency (NTA) on Tuesday.

A total of 22 candidates scored 100 percentile in three of their opted subjects, while 180 candidates secured 100 percentile in two subjects, the agency said.

As many as 3,214 candidates scored 100 percentile in one subject, it added.

"One candidate achieved a 100 percentile score in four out of the five subjects opted for in CUET-UG 2026, recording the best performance in the examination," the NTA said in a statement.

The testing agency also released the gender-wise list of the top 10 candidates securing the highest NTA score in five subjects.



The top female candidate scored 1232.19, marginally higher than the top male score of 1230.82. The second and third highest scores among female candidates were 1203.78 and 1202.15, respectively, while the corresponding male scores stood at 1207.21 and 1205.96, respectively.

According to the NTA, a total of 15,68,867 unique candidates registered for the exam, of whom 11,64,098 appeared. Among those registered this year, 7,94,257 were male, 7,74,607 female, and three third-gender candidates. Among those who appeared, 5,78,500 were male, 5,85,596 female, and two were third-gender candidates. The category-wise data showed 6,86,419 General category candidates, 5,28,838 OBC (Non creamy layer) candidates, 1,71,397 Scheduled Castes (SC) candidates, 95,464 Scheduled Tribes (ST) candidates, and 86,749 Economically Weaker Section (EWS) candidates had registered for the exam.

"The NTA conducted the Common University Entrance Test (UG)-2026 in computer-based test (CBT) mode for 15,68,867 unique registered candidates," the agency said in a press release.

The agency said CUET-UG 2026 was conducted in 321 exam cities, including 13 cities outside India, and offered candidates 37 subjects, including 13 languages, 23 domain-specific subjects and one General Aptitude Test.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.